**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**CC.No.624/2018**

**Prosecution Witness : 8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | தெய்வம் | **Caste** | : | |
| **Father's Name** | : | பெரியசாமி | **Calling** | : | கூடுதல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | திண்டுக்கல் | **Age** | : | **58/2025** |
| | | | **Dated** | : | **17.03.2026** |

**17.03.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 14 **திரு. தெய்வம்**. பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 8** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர் இல்லை. 355 BNSS petition filed and allowed. 3ம் எதிரி இறப்பு. Charge abated.**

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.09.2018ம் தேதி திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நியைலத்தில் பணியில் இருந்தபோத சார்பு ஆய்வாளர் மகேஷ் திண்டுக்கல் பாதாள காளியம்மன் கோவில் தெருவைச்சேர்ந்த ஆனந்தகுமார் மகன் அரசன் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப்பெற்று நிலைய குற்ற எண்.848/2018 சட்டப்பிரிவு 394 இதச வாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

வழக்கினை எனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மணிமாறன், குமார்ரெங்கதுரை ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வைவிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். பின்பு சாட்சிகள் எழில் அரசன், நல்லாயுதம், கண்ணன், தினேஷ்குமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவர எதிரிகளை தேடிவந்த நிலையில் 09.10.2018ம் தேதி வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் 8.30 மணிக்கு திண்டுக்கல் பழனி ரோடு மேற்கு தாலுகா அலுவலகம் செல்லும் ரோட்டில் போலிஸ் பார்டியுடன்வாகனத்தணிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது சந்தேகத்திற்கிடமாக TN 49 BF 1392 YEMAHA FZ இருசக்கர வாகனத்தில் வந்த எதிரி ஒருவரை நிறுத்தி விசாரிக்க எதிரி மதிவாணன் தாமாக முன்வந்து குற்றத்தை ஒப்புக்கொண்டதால் காரணம் கூறி கைதுசெய்தும் அவர் தன்னிச்சையாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை 08.45 மணிக்கு சாட்சிகள் மோகன் குமார், சரவணக்குமார் முன்னிலையில் பதிவுசெய்து எதிரி ஆஜர் செய்த 3 பவுன் மதிப்புள்ள தங்க செயின் மற்றும் 2 பவுன் நவரத்தின கல்வைத்த மோதிரத்தையும் அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன். எதிரி மற்றும் வழக்குச்சொத்துகளுடன் நிலையம் வந்து பாராவசம் ஒப்புவித்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். 11.10.2018ம் தேதி காலை 08.00 மணிக்கு திண்டுக்கல் - திருச்சி ரோடு ரயில்வே மேம்பாலம் அருகில் வாகனத்தணிக்கை செய்தபோது TN 57 BZ 1618 என்ற பல்சர் வாகனத்தில் வந்த எதிரி விஜய் ஜெயசீலன் என்பவரை நிறுத்தி விசாரிக்க அவர் தாமாக முன்வந்து குற்றத்தை ஒப்புக்கொண்டார். அவரை காரணம் கூறி கைது செய்து அவர் தண்ணிச்சையாக கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தை 08.15 மணிக்கு சாட்சிகள் குணசேகரன், பாண்டியராஜன் ஆகியோர் முன்னிலையில் பதிவுசெய்தும் எதிரி ஆஜர் செய்த இருசக்கர வாகனம் மற்றும் சாம்சங் செல்போன் ஒன்றை அத்தாட்சியில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி வாக்குமூலம் பதிவுசெய்தேன். எதிரி மற்றும் வழக்குச்சொத்துகளுடன் நிலையம் வந்து பாவராவசம் ஒப்புவித்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். வழக்கின் சம்பந்தப்பட்ட மற்றொரு எதிரியான விக்னேஷ் என்பவர் வேறொரு வழக்கில் விருதுநகர் மாவட்ட சிறைச்சாலையில் இருந்தவரை சம்பிரதாய கைது செய்தும் PT Warrant மூலம் கனம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த விசாரணை அலுவலர் மகேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தும் வழக்குச்சொத்தை படிவம் 91 மூலம் கனம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து RPR.no.160/2018 ஆக பதிவு செய்தேன்.

பின்பு எனது புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது 379 இதச வாக குற்றஇறுதிஅறிக்கை தாக்கல் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.12, பார்வை மகஜர் அ.சா.ஆ.13, எதிரி மதிவாணன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூல அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.14, எதிரி விஜயஜெயசீலன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூல அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.15, படிவம் 91 எண்ணிக்கை 2 ஆனது அ.சா.ஆ. 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>1,2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரியிடமிருந்து கைப்பற்றிய வழக்குச்சொத்துகள் அ.சா.2 என்பவருக்கு சொந்தமானது என்பதற்கு அ.சா.2 என் விசாரணையில் ஏதும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்ட தேதியில் இருந்து 15 நாட்கள் கழித்து தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிரிகளை அடையாளம் காட்டுவதற்காக அ.சா.2 முன்னிலையில் அடையாள அணிவகுப்பு நடத்தவில்லை என்றால் சரிதான். அ.சா.1 புகாரிலோ போலிசார் விசாரணையிலோ எதிரிகள் அடையாளம் குறித்தோ அல்லது எதிரியின் பயன்படுத்திய வண்டியின் பதிவு எண் , பெயர் பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சார்பு ஆய்வாளர் மகேஷ் முதல் தகவல் அறிக்கை தாமதமாக அனுப்பியதற்கு காரணம் ஏதும் கூறவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 14ல் அ.சா.1ன் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். அ.சா.7 எனது விசாரணையில் மதிவாணன் ஒப்புதல் வாக்குமூலம் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி மதிவாணன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூல அடிப்படையில் தான் அத்தாட்சி மூலம் வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். அ.சா.7 எனது விசாரணையில் அத்தாட்சியில் மார்க்கெட் அருகே கையொப்பம் செய்ததாக குறிப்பிடாமல் தாலுகா அலுவலகம் அருகில் அத்தாட்சியில் கையொப்பம் செய்ததாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

அ.சா.7 அத்தாட்சியில் மதிவாணன் என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட வழக்குச்சொத்துகள் அவர் முன்பாக எடைபோட்டு பார்த்ததாக என் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.7 எதற்காக அத்தாட்சி தயார் செய்யப்பட்ட இடத்திற்கு வந்தார் என்று எனது விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் சொந்தவேலை காரணமாக வந்தார். அத்தாட்சி தயார் செய்யப்பட்ட இடத்தில் வழக்குச்சொத்துகளை கைப்பற்றி வழக்குச்சொத்துகளை வைப்பதற்காக பெட்டியில் வழக்குச்சொத்துகளை அத்தாட்சி தயார் செய்யப்பட்ட இடத்தில் வைத்து சீல் செய்யப்படவில்லை

என்றால் சரிதான்.எதிரி மதிவாணன் சென்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் யார் என்றும் அவரை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதிரியை சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் கைதுசெய்யவில்லை என்றாலும் ஒப்புதல் வாக்குமூலம் ஏதும் கொடுக்கவில்லை என்றாலும் அத்தாட்சியில் உள்ள வழக்குச்சொத்துக்களுக்கும் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் வழக்குச்சொத்துகள் மற்றும் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.எதிரிகள் மீது இவ்வழக்கு தவறாக தாக்கல் செய்யப்பட்டு குற்றஇறுதிஅறிக்கை தவறாக எதிரி மீது புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C Digitally signed by DINESH KUMAR C Date: 2026.03.17 14:10:47 +0530

Judicial Magistrate No.II
Dindigul.